**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 39/2016**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. சீனிவாசன், மூன்றாம் நிலை எழுத்தர் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025**–ஆம் ஆண்டு **பிப்ரவரி** மாதம் **03**–ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 03.02.2025**

**பெயர் – சுமித்திரா என்கிற டில்லியம்மாள்**

**த/பெ – சேகர்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–** 12.50 பி.எம்

**குறுக்கு விசாரணை**

1. என்ன விசயமாக நான் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் அடிக்கடி பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்ததால் தாக்கல் செய்தேன். இந்த வழக்கு 2016 ம் ஆண்டில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். பிரதிவாதிகள் 19.07.2016 அன்றே வழக்கிற்கான பதிலுரையை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் போட்ட பதிலிலேயே நான் தாவா சொத்தினை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கக்கோரி எதிர் பரிகாரம் கோரியுள்ளனார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2016 ம் ஆண்டே அவர்கள் தாக்கல் செய்த பதிலுரையில் எதிர் பரிகாரம் கோரியும் அதற்கு நீதிமன்றம் கட்டணம் செலுத்துவது குறித்து எதுவும் கூறவில்லை என்றும் அது சம்மந்தமாகத்தான் எதிர் உரையை திருத்த மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2023 ம் ஆண்டே என்னை விசாரணை செய்தும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது முதல் பிரமாண வாக்குமூலத்திலும் பிரதிவாதியின் எதிர்பரிகாரம் குறித்து நான் எதுவுமே தெரிவிக்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை.

2. என்னை குறுக்கு விசாரணை செய்த பிறகு தான் 10.01.2024 ல் தான் எதிர்பரிகாரத்திற்கு பதிலுரையை நான் தாக்கல் செய்தேன் என்றால் தெரியவில்லை. பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் என்று ஒரு வழக்கில் ஏற்கனவே தீர்ப்பு பகரப்பட்டதால் தான் அதன் முன்னிலையில் எதிர் பரிகாரம் பிரதிவாதிகள் கோரினர் என்றால் சரியல்ல. ஏற்கனவே அசல் வழக்கு 94/1998 என்ற வழக்கில் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் உரிமையாளர்கள் என்று தீர்ப்பு பகரப்பட்ட நிலையில் அதன் அடிப்படையில் நீதிமன்றம் மூலம் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை எடுத்துவிட்ட பின்னர் நான் தான் வழக்கு சொத்தில் நுழைந்து பிரச்சனை செய்வதாக பிரதிவாதிகள் கூறினார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிர் பரிகாரத்திற்கு முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தி உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் உரிமை கோரியுள்ள பகுதியில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 1.00 பி.எம்**